www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

V11His

விருதுநகர் மாவட்டம்

முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - ஜனவரி 2025

-----

வகுப்பு 11

காலஅளவு: 3.00 மணிநேரம் **வரலாறு** மொத்த மதிப்பெண்கள்: 90

பகுதி - I

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20×1=20

ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) எழுத்துகள் அறிமுகமாவதற்கு முந்தைய காலகட்டம் ............. எனப்படுகிறது.
அ) வரலாற்றுக்கு முந்தைய காலம் ஆ) வரலாற்றுக் காலம்
இ) பழங்கற்காலம் ஈ) புதிய கற்காலம்

2) பர்சஹோம் ............. நிலவிய இடமாகும்.
அ) காஷ்மீரின் புதிய கற்காலப் பண்பாடு
ஆ) கங்கைச் சமவெளியின் புதிய கற்காலப் பண்பாடு
இ) கிழக்கிந்தியாவின் புதிய கற்காலப் பண்பாடு
ஈ) தென்னிந்தியாவின் புதிய கற்காலப் பண்பாடு

3) வேதப்பாடல்களின் முக்கிய தொகுப்பின் பெயர்
அ) பிராமணங்கள் ஆ) சம்ஹிதைகள் இ) ஆரண்யகங்கள் ஈ) உபநிடதங்கள்

4) **கூற்று** : முற்கால வேதகாலத்தில் குழந்தைத் திருமணம் இருந்ததற்கான சான்றுகள் இல்லை.
**காரணம்** : பின் வேதகாலத்தில் பெண்கள் சடங்குகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர்.
அ) கூற்றும் காரணமும் சரியானவை. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்றும் காரணமும் சரியானவை. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
இ) கூற்று சரியானது, காரணம் தவறானது.
ஈ) கூற்று, காரணம் இரண்டும் சரியானவை.

5) அஜாத சத்ருவுக்கும், புத்தருக்குமிடையேயான சந்திப்பைக் குறிப்பிடும் பௌத்த நூல் ............. ஆகும்.
அ) சீவகசிந்தாமணி ஆ) அச்சரங்கசூத்திரம் இ) கல்பசூத்திரம் ஈ) சமணபலசுத்தா

6) இக்சவாகுகள் ............. பகுதியில் வலிமை பெற்றிருந்தனர்.
அ) ஆந்திரா-கர்நாடகா ஆ) ஒடிசா இ) தக்காணப்பகுதி ஈ) பனவாசி

7) **கீழ்காணும் கூற்றுகளை வாசித்து தவறான கூற்றை வெளிக்கொணர்க:**
i) களப்பிரர்கள் சைவத்தை ஆதரித்தனர்.
ii) பல்லவரையும், பாண்டியரையும் களப்பிரர் தோற்கடித்தனர்.
iii) இக்சவாகுகள் வேள்விகளை ஆதரித்தனர்.
iv) உப்பு வியாபாரிகள் உமணர் என்றழைக்கப்பட்டனர்.

8) அலெக்ஸாண்டரின் திறன்மிக்க தளபதிகளுள் ஒருவர் .............
அ) செலியுகஸ் நிகேடர் ஆ) அன்டிகோனஸ் இ) அண்டியோகஸ் ஈ) டெமெட்ரியஸ்

9) கீழ்கண்டவற்றில் பொருத்தமற்றது எது?
அ) புத்தசரிதம் - அஸ்வகோஷர்
ஆ) ஏரித்ரியக் கடலின் பெரிப்ளஸ் - மெகஸ்தனிஸ்
இ) அர்த்தசாஸ்திரம் - கௌடில்யர்
ஈ) காமசூத்திரம் - வாத்சாயனர்

10) குப்தர் காலம் குறித்த கீழ்கண்ட சான்றுகளில் எது நம்பமுடியாதது என்று நீங்கள் கருதுகிறீர்கள்?
அ) இலக்கியச் சான்றுகள் ஆ) கல்வெட்டுச் சான்றுகள்
இ) நாணயச் சான்றுகள் ஈ) கதைகள், புராணங்கள்

11) தர்க்கம் குறித்த முதல் முழுமையான பௌத்த நூலை எழுதியவர் .............
அ) திக்நாகர் ஆ) வசுபந்து இ) சந்திரகாமியா ஈ) வராகமிகிரர்

12) பிரபாகரவர்த்தனர் தனது மகள் ராஜ்யஸ்ரீயை ............. என்பவருக்குத் திருமணம் செய்து கொடுத்தார்.
அ) கிரகவர்மன் ஆ) தேவகுப்தர் இ) சசாங்கன் ஈ) புஷ்யபுத்திரர்

13) கீழ்க்கண்டவற்றுள் ஹர்ஷரால் எழுதப்பட்ட நூல் எது?
அ) ஹர்ஷசரிதம் ஆ) பிரியதர்சிகா இ) அர்த்தசாஸ்திரா ஈ) விக்ரம ஊர்வசியம்

14) அரச குடும்பம் தொடர்பான சடங்குகளை நடத்துவதற்காகச் சாளுக்கியரால் கட்டப்பட்ட கோவில்கள் எங்கு உள்ளது?
அ) ஐஹோல் ஆ) வாதாபி இ) மேகுடி ஈ) பட்டாடக்கல்

15) ஆதிசங்கரரால் எடுத்துரைக்கப்பட்ட கோட்பாடு .............
அ) அத்வைதம் ஆ) விசிஷ்டாத்வைதம் இ) சைவசிந்தாந்தம் ஈ) வேதாந்தம்

16) மம்லுக் என்ற பெயர் ஒரு .............க்கான அரபுத் தகுதிச்சுட்டாகும்.
அ) அடிமை ஆ) அரசர் இ) இராணி ஈ) படைவீரர்

17) கீழ்க்கண்டவற்றை காலவரிசைப்படுத்துக.
அ) லோடி வம்சம், சையது வம்சம், துக்ளக் வம்சம், கில்ஜி வம்சம், அடிமை வம்சம்
ஆ) அடிமை வம்சம், கில்ஜி வம்சம், துக்ளக் வம்சம், லோடி வம்சம், சையது வம்சம்
இ) அடிமை வம்சம், துக்ளக் வம்சம், கில்ஜி வம்சம், சையது வம்சம், லோடி வம்சம்
ஈ) அடிமை வம்சம், கில்ஜி வம்சம், துக்ளக் வம்சம், சையது வம்சம், லோடி வம்சம்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



18) ............. கடல்வழிப் படையெடுப்புகள் ஸ்ரீவிஜயா அரசு வரை விரிவடைந்திருந்தன.
அ) மூன்றாம் குலோத்துங்கன் ஆ) முதலாம் இராஜேந்திரன்
இ) முதலாம் இராஜராஜன் ஈ) பராந்தகன்

19) **பொருத்துக:**
i) படை முகாம் - 1. படைவீடு
ii) புறக்காவல் படைகள் - 2. தண்டநாயகம்
iii) தலைவர் - 3. நிலைப்படை
iv) படைத்தளபதி - 4. படைமுதலி
அ) 1, 3, 4, 2 ஆ) 4, 2, 1, 3 இ) 2, 1, 3, 4 ஈ) 2, 3, 1, 4

20) வறட்சிப்பகுதியான இராமநாதபுரத்தில் பாண்டிய அரசர்கள் ............ஐக் கட்டினார்கள்.
அ) அகழிகள் ஆ) மதகுகள் இ) அணைகள் ஈ) ஏரிகள்

## பகுதி - II

7×2=14

**குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண் 30-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

21) வரலாற்றுக்கு முந்தைய காலத்துக்கான ஆய்வுக்கு உதவும் சான்றுகள் யாவை?
22) எதன் காரணமாக மகா அலெக்ஸாண்டர், போரஸின் அரியணையைத் திருப்பித் தந்தார்?
23) பண்டமாற்று முறையை விளக்குக.
24) ''சத்ரப்கள்'' பற்றி நீவிர் அறிவது யாது?
25) அலகாபாத் தூண் கல்வெட்டுக் குறித்துக் கூறுக.
26) ஹர்ஷர் எவ்வாறு கன்னோசியின் மன்னரானார்?
27) ஐஹோல் கல்வெட்டு குறித்துச் சிறுகுறிப்பு வரைக.
28) இஸ்லாமிய இசைஞர்கள் அறிமுகப்படுத்திய இசைக் கருவிகள் யாவை?
29) முதலாம் இராஜேந்திரனுக்கான பட்டங்கள் யாவை?'
30) மார்க்கோ போலோ பற்றி சிறுகுறிப்பு வரைக.

## பகுதி - III

7×3=21

**குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண் 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

31) சிந்து நாகரிகம் நிலவிய பகுதியின் எல்லைகளைக் குறிப்பிடுக.
32) தென்னிந்தியாவின் செம்புக்காலப் பண்பாடுகளைச் சுருக்கமாக விவரிக்கவும்.
33) தமிழ்நாட்டில் சமணம் செலுத்திய செல்வாக்கைக் குறிப்பிடுக.
34) இந்தியாவில் மகா அலெக்ஸாண்டரின் படையெடுப்பின் தாக்கங்களைக் குறிப்பிடுக.
35) சோழ அரசர்களில் தலைசிறந்தவன் கரிகாலன்.
36) டெமெட்ரியஸுடைய நாணயங்களின் சிறப்பைச் சுட்டிக்காட்டுக.
37) குப்தர் காலத்தில் அறிவியல் வளர்ச்சி குறித்து விவரிக்கவும்.
38) சாளுக்கியர் ஆட்சியில் அரசகுல மகளிரின் முக்கியத்துவம்.
39) முதலாம் இராஜேந்திர சோழன் 'கடாரம் கொண்டான்' என அழைக்கப்படுவது ஏன்?
40) அல்பெருனி குறிப்பு வரைக.

## பகுதி - IV

7×5=35

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

41) அ) தமிழ்நாட்டின் பெருங்கற்கால அகழ்வாய்விடங்களைப் பற்றி விவரி. **(அல்லது)**
ஆ) புத்தரின் எண்வழிப் பாதையை விவரி.

42) அ) அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள் பற்றிக் கூறுக. **(அல்லது)**
ஆ) களப்பிரர் என்போர் யார்? அவர்கள் குறித்து பூலாங்குறிச்சிக் கல்வெட்டிலிருந்து அறிந்து கொள்வதென்ன?

43) அ) கலைக்கும் இலக்கியத்துக்குமான கனிஷ்கரின் பங்களிப்பு குறித்து விவாதிக்கவும். **(அல்லது)**
ஆ) ''குப்தர் காலம் பண்டைய இந்தியாவின் பொற்காலம்'' விவாதிக்கவும்.

44) அ) ஹர்ஷரின் சமயக்கொள்கை பற்றி விளக்கம் தருக. **(அல்லது)**
ஆ) பல்லவ அரசர்கள் வெளியிட்ட நிலக்கொடை ஆவணங்களின் முக்கியத்துவத்தைக் கோடிட்டுக் காட்டுக.

45) அ) மாமல்லபுரம் கடற்கரைக் கோவில்களின் கட்டடக்கலை மேன்மைகளை விளக்குக. **(அல்லது)**
ஆ) அலா-உத்-தின் கில்ஜியின் பொருளாதாரச் சீர்திருத்தங்களை விவாதிக்கவும்.

46) அ) இந்திய வரலாற்றில் இரண்டாம் தரெய்ன் போர் திருப்புமுனையாக அமைந்தது எவ்வாறு? **(அல்லது)**
ஆ) **கொடுக்கப்பட்டுள்ள பண்டைய இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்:**
(i) இந்திரபிரஸ்தம் (ii) உஜ்ஜயினி (iii) நாளந்தா (iv) கலிங்கம் (v) வல்லபி

47) அ) சோழர் காலத்தில் உருவாக்கப்பட்ட பாசன, விவசாய நிர்வாகத் திட்டங்கள் அதிக வருமானத்துக்கு வழிவகுத்தன - ஆராய்ந்து எழுதுக. **(அல்லது)**
ஆ) மௌரியர் காலத்தில் நிகழ்ந்த ஏதேனும் ஐந்து நிகழ்வுகளுக்குக் காலக்கோடு வரைந்து காட்டுக.

----------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com